









# ஈர்க்குது... ஈஷா கல்வி!

வகுப்பறைகள் இல்லை. முதுகில் மூட்டையாய்க் கனக்கும் பாடப் புத்தகம் இல்லை. விடுமுறைகள் இல்லை. கடுமையான விதிமுறைகள் இல்லை. மாணவர்கள் உண்டு, உறங்கி, எழுந்து நடமாடி, உலவுகின்ற இடங்களே ஈஷா கல்வி இல்லத்தின் வகுப்பறைகள். மூன்று விதப் பிரிவுகளில் இயங்கி வருகிறது ஈஷா கல்வி அறக்கட்டளை. ஈஷா வித்யா பள்ளி, ஈஷா சமஸ்கிருதப் பள்ளி, ஈஷா கல்வி இல்லம்.

''கிராமப்புறக் குழந்தைகளின் மேம்பாட்டுக்காக, சத்குருவின் தொலைநோக்குப் பார்வையில் உருவானதே ஈஷா வித்யா. உயர்தரமான கல்வியைத் தருவது. அவர்களது வளர்ச்சியை முன்னெடுத்துச் செல்வது. இதன் மூலமாக கிராமப்புறக் குழந்தைகளைப் பேணிக் காப்பது ஆகியவை இதன் நோக்கம்!'' என்கிறார் ஈஷா வித்யாவில் இயங்கி வரும் ஒருவர்.

பொருளாதார ரீதியில் பின்தங்கிய குழந்தைகளுக்குக் குறைந்த கட்டணம் மற்றும் முழு கல்வி உதவித் தொகை வாயிலாக இயங்குகிறது ஈஷா வித்யா. மாநிலம் முழுவதும் 206 பள்ளிகள் தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ளன. தற்போது ஈஷா யோகா மையம் செயல்படும் கோவை, நாகர்கோயில், தூத்துக்குடி, கடலூர், ஈரோடு, விழுப்புரம், வனவாசி என்ற எட்டு இடங்களில் ஈஷா வித்யாவும் செயல்படுகிறது! ஆங்கிலமும் கணினியும் முக்கியமாகக் கற்றுத் தரப்படுகின்றன. மதிய உணவு, பேருந்து வசதி இலவசம். ஈஷா வித்யா பள்ளிகள் தொடங்கி ஆறு வருடங்கள் ஆகின்றன.

''நான் ஒரு டீக்கடை தொழிலாளி. ஈஷா வித்யா உதவித்தொகை திட்டத்தில் என் மகள் படிக்கிறாள். முதல்முறையாக என் குடும்பத்தில் இந்தக் கல்வி பெறுபவள் இவளே!'' எனக் கடிதம் எழுதியுள்ளார் தங்கவேல்.

ஈஷா சமஸ்கிருதப் பள்ளி 2009ல் தொடங்கப்பட்டது. கலாசாரத்தை அடிப்படையாகக் கொண்ட பள்ளி இது. எழுபது பேர் பயின்று வருகின்றனர்.

ஈஷா கல்வி இல்லம், வருடத்தில் ஒன்பது மாதங்கள் இயங்குகின்றன. சனி, ஞாயிறு விடுமுறை வழக்கம் கிடையாது. இடையில் ஒரு மாதம், இறுதியில் இரண்டு மாதம் விடுமுறை. முதல் வகுப்பு முதல் ப்ளஸ் டூ வகுப்பு வரை என்கிற பஞ்சாயத்தும் இங்கு கிடையாது. வகுப்பறைகளுக்குள்ளும், பாடப்புத்தகச் சுமைகளுக்கும் கட்டிப்போடாத வாழ்க்கைக் கல்வித் திட்டம்தான் இங்கு சிலபஸ். அதுவும் சர்வ தேசத் தரத்தில் போதிக்கப்படுகிறது.

பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரண்டாம் வகுப்பு ஆகிய இரு நிலைகளில் மட்டுமே ICSE (Indian Certifficate of for School Examination) தேர்வுகள் நடத்தப்பட்டு, CISCE எனப்படும் கவுன்சில் மூலமாகச் சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன.

எந்த சப்ஜெக்டாக இருந்தாலும் ஒவ்வொருவர்க்கும் பிரத்யேக கவனம் எடுத்துக் கல்வி புகட்டப்படுவது ஈஷா கல்வி இல்லத்தின் தனிச் சிறப்பு. களரிப் பயிற்சிக் கலை முதல் கழனியில் பயிரிடுவதுவரை கற்றுத் தரப்படுகின்றன. இங்கு பயின்று செல்லும் ஒரு மாணவன் விஞ்ஞானியாகவும் ஆகலாம். விவசாயியாகவும் இயங்கலாம். இசைக் கலைஞனாக, ஓவியனாக, களிமண் சிற்பக் கலைஞனாக, நாடகக் கலைஞனாக, மொத்தத்தில் சிறந்த மனிதனாக வாழலாம் என்பதே ஈஷா கல்வி இல்லத்தின் அடிப்படை நோக்கம்.

- ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு

ஸ்பெஷல்